செ.வெ.எண்: 693 /2016 நாள்: 03.10.2016

**முன்னாள் படை வீரர்களை தேர்தல் பாதுகாப்புபணியில் சிறப்பு காவலர்களாக நியமித்தல்**

2016 –ஆம் ஆண்டு அக்டேபார் 17 மற்றும் 19-ம் தேதிகளில் நடைபெறவுள்ள தமிழக உள்ளாட்சி தேர்தலில் தேர்தல் பாதுகாப்பு பணிக்கு முன்னாள் படை வீரர்கள் சிறப்பு காவலர்களாக நியமனம் செய்யப்படவுள்ளனர். மேலும், இதில் பணியாற்றும் நாட்களுக்கு (06 நாட்கள்) உணவுபடி மற்றும் மதிப்பூதியமும் வழங்கப்படும். பணியின் போது ஏற்படும் விபத்து மற்றும் உயிர்சேதம் ஆகியவற்றிற்கு தக்க இழப்பீடு அரசால் வழங்கப்படும்.

நாட்டிற்கு அரும்பணியாற்றிய முன்னாள் படை வீரர்களாகிய நாம் நாட்டிற்கு தேவைப்படும் நிலையில் எத்தகைய சூழலிலும் மீண்டும் அரும்பணியாற்றிட தயார் என்பதை நிரூபித்திடும் வகையில் தேர்தல் பாதுகாப்பு பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள 65 வயதிற்குட்பட்ட திடகாத்திரமான முன்னாள் படை வீரர்கள், இளநிலைபடை அலுவலர்கள் அனைவரும் வரவேற்கபடுகின்றனர். எனவே கன்னியாகுமரி மாவட்டத்தை சேர்ந்த முன்னாள் படைவீரர்கள் மாநில /மைய அரசு, அரசுடைமை நிறுவனங்கள் மற்றும் /தனியார் துறையில் நிரந்தர மற்றும் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றி வரும் முன்னாள் படை வீரர்கள் அனைரும் தேர்தல் நாட்களில் சிறப்பு காவலர்களாக பணியாற்ற தங்களது விருப்பத்தினை உரிய படிவத்தில் 11.10.2016 -க்குள் நாகர்கோவில் கோட்டாரில் அமைந்துள்ள மாவட்ட முன்னாள் படை வீரர் நல அலுவலகத்தை நேரில் அணுகி தெரிவித்திடுமாறும் நேரில் வர இயலாதவர்கள் தங்களுக்கு அருகாமையிலுள்ள ஊளுனு கேன்டீனிலிருந்து படிவத்தை பெற்று பூர்த்தி செய்து துணை இயக்குநர், முன்னாள் படை வீரர் நலன், ரயில்வே பீடர் ரோடு, கோட்டார், நாகர்கோவில்-2 என்ற முகவரிக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கும்படியும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் படிவத்தில் தேர்தல் அடையாள அட்டை எண் மற்றும் கைபேசி எண் (Cell No மட்டுமே) ஆகியவற்றை தவறாது பூர்த்தி செய்திடல் வேண்டுமெனவும் கன்னியாகுமரி மாவட்ட முன்னாள் படைவீரர் நல துணை இயக்குநர்(பொ) திரு.எம். ஸ்ரீனிவாசன் தெரிவித்துள்ளார்.

---

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.**